

# நான் யார் அந்த இராஜா எனக்காக மரிக்க?

இலவசம்—விற்க கூடாது.

எழுதியவர்: வாட்சன் குட்மேன்.

# நான் யார்?

நமது சிருஷ்டிகராகிய தேவன் நாம் யார் என்றும் நாம்எதற்கு, ஏன் சிருஷ்டிக்கப்பட்டோம்என்றும் அவரது நித்திய வசனம் சொல்லுகிறது. அதை நாம் பின்பற்றினல் தேவனுடைய மீட்பைக் குறித்தும் நாம் திட்டமாக அறியலாம்.

ஆனல் என் ஜீவன் என் சிருஷ்டிகர் என்னை சிருஷ்டித்த நோக்கத்திற்கு தகுதிவுடையதாய் இருக்கிறது. ஆகையால் அவருடைய சிங்காசனத்தின் கீழ் நான் நித்திய காலமாக அவருடன் ஜீவிப்பேன்.

—வாட்சன் குட்மேன்.

தேவன் மனிதனை சிருஷ்டித்ததற்கு நோக்கம் உண்டு. 1

நித்திய மணவாட்டியை பெற்று கொள்ள.

ஏசாயா *62:5B*

மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல, உன் தேவன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார்.

மத்தேயு. *25:1,6*

அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு, மணவாளனுக்கு எதிர் கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர் கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

2 தேவன் மனிதனை அவருடைய சாயலில் படைத்தார்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

—ஆதியாகமம். *1:27*

தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே. —எபேசியர் *1:4*

தேவனிடத்தில் பங்கு கொள்ள தகுதியுடையவர்கள் .........திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு......... —II பேதுரு **1:4**B

ஆதியாகமம். *9:6*A

*மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால்:*

அப்போஸ்தலர் *17:24*A, *25*A, *26*A, *27 - 29*

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனுனவர், எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், மனுஷஜாதியான சகலஜனங்களையும் அவர்ஒரே இரத்தத்திஞலேதோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு.............. ......உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது.

## பரிசுத்தத்திலிருந்து பாவமும், அந்தகாரமும்.

## தேவன் பரிசுத்தர், அவரைப்போல் படைக்கப்பட்டான்

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. —I பேதுரு *1:16*

## கீழ்படியாமை நம்மை தனிமையாக்குகிறது.

அன்றியும் ஒரே, மனுஷனுடைய கீழ்ப்படியாமையினு லே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினுலே அநேகர் நீதிமான்களாக்கப்படு வார்கள். —ரோமர் *5:19*

எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, —ரோமர் *3:23*

ஏசாயா 64:6

நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது.

*நித்திய மரணமானது என் மீது*

ரோமர் 5:12

இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா .........எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.

## மாமிசத்தில் விழுந்தவன், களிமண், புல், புகைக்கு ஒப்பாயிருக்கிறோம்.

இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.
—ஏசாயா *64:8*

மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. —I பேதுரு *1:24*

நாளைக்கு நடப்பது.........புகையைப்போலிருக்கிறதே.
—யாக்கோபு *4:14*

## சங்கீதம் *24:7* முதல் *10* வரை

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா.

## 8 இயேசுகிறிஸ்து ராஜாவென்று வெளிப்படுத்துகிருர்.

யேவான் *18:36,37*

இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாஞல் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்ருர். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியாஞல் நீ ராஜாவோ என்ருன். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிருன் என்ருர்.

எபிரெயர் *1:8*

குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

தானியேல் *4:37*

ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினன்.

யோவான் *17:2*

அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

1 பேதுரு *3:22*

அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிருர்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

எபேசியர் *1:20-23*

எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், ..................மேலான தலையாகத் தந்தருளினர்.

வெளிப்படுத்தின விசேஷம் *5:12*B

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிருர் என்று சொன்ஞர்கள்.

I கொரிந்தியர் *8:6*

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறேம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாயச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறேம்.

சங்கீதம் *72:8,11*

ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார், சகல ராஜக்களும் அவரைப் பணிந்து கொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.

எரேமியா *10:7,10*A

ஜாதிகளின் ராஜாவே, உமக்குப்பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை. கர்த்தரோ மெய்யான தெய்வம், அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா.

நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன். —ஏசாயா *42:8*

கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனும யிருக்கிறார். —சங்கீதம் *95:3*

கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திர ராயிருக்கிறீர்; நீரேசகலத்தையும் சிருஷ்டித்தீர், உம் முடைய சித்தத்தினாலே அவைகள் ........................... சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.

—வெளிப்படுத்தின விசேஷம் *4:11*

ஏசாயா *9:7*B

என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப் படுத்தும் படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக் கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை.

தானியேல் *7:14*

சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும், அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடையராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

## அவருடைய மரணத்தை குறித்தும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் முன் அறிவித்தல்.

### மத்தேயு *20:18,19*

இதோ எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

# விலையேறப் பெற்ற இரத்தம்—
# விலையேறப் பெற்ற இரட்சகர்.

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். —எபேசியர் *2:13*

நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே —எபிரெயர் *13:20*A

கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத்தெரியும். —II தீமோத்தேயு *3:15*

என்னை விடுவிக்க கிறிஸ்து இரண்டாம் மரணத்தையும் பாதாளத்தையும் வென்ருர், நான் நித்திய மரணத்துக்கு தகுந்தவன்.

எசேக்கியேல் *18:4*B

...........பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்,

ரோமர் *6:23*A

பாவத்தின் சம்பளம் மரணம்.

*மரணமானது எனக்காக வெல்லப்பட்டது*

II தீமோத்தேயு *1:8-10*

ஆகையால் நம்முடைய கர்த்தரைப்பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருகிற என்னைக் குறித்தாவது, அவர் நிமித்தம்.................
..............சுவிசேஷத்தினுலே வெளியரங்கமாக்கினுர்.

18 முழு இருதயத்தோடும் தேடுகிறவர்களுக்கு ராஜா இலவசமான இரட்சிப்பை வழங்குகிறர்.

கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காகமரித்து. —I கொரிந்தியர் *15:3*

நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத்தன் ஜீவனைக் கொடுக்கிறுன். —யோவான் *10:11*

பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரிந்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறேம்.

—II கொரிந்தியர் *5:15*

அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? —I கொரிந்தியர் 6:9A

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும்....................
..............ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

—ரோமர் *8:5-9*

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான். —நீதிமொழிகள் *28:13*

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.
—I கொரிந்தியர் *2:5*

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். —யோவான் *8:31*

இரட்சிப்பானது ஜீவனுள்ள உறவும், கிறிஸ்துவோடு 
கூட உள்ள ஐக்கியமும்மாக காணப்படுகிறது.

மேலும் கிறிஸ்து, உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். —ரோமர் *8:10*

ஆனுலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினுல் விசுவாசியாமலிருக்கிறீர்கள். என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்..................
...........என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

—யோவான் *10:26-28*

I யோவான் 5:5

இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

யோவான் 1:13

அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்சசித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.

யோவான் 8:32

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

II கொரிந்தியர் 3:17

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

I கொரிந்தியர் 6:9-11

அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாரதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும்................நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.

I கொரிந்தியர் 6:2A

பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?

ஏசாயா 62:3

நீ கர்த்தருடைய கையில் அலங்கார மான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.

24 தேவனோடு உள்ள ஐக்கியத்திற்காக சிருஷ்டிக்கப் பட்டான்.

### சங்கீதம் *145:8*

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்த மும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

### II கொரிந்தியர் *6:16*

தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப் பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

## கிறிஸ்துவுக்கும் உண்மைவிசுவாசிகளுக்கும் இடையே உள்ள உறவு. 25

யோவான் *14:20*

நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.

மத்தேயு *28:19,20*

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம், சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

I பேதுரு *1:4*

அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

I பேதுரு *5:10*

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.

கலாத்தியர் *4:4,5*

நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.

*தேவனுடைய வாரிசு:*

வெளிப்படுத்தின விசேஷம் *21:7*

ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

## தேவனுடைய பிள்ளைகள் அவரைப்போல இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறுனவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். —ரோமர் *8:28,29*

### மன்னிக்கிறவர்களாயிருங்கள்

பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்.

—லூக்கா *23:34*A

I தெசலோனிக்கேயர் *2:12*

தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.

லூக்கா *6:47,48*

என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறுனென்று உங்களுக்குக்காண்பிப்பேன், ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறுன்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல்........ ............அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

எபேசியர் *2.8-10*

**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர்முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.**

I கொரிந்தியர் *2:5*

**என்பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்...... ...........உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.**

மேலும், தமது முதற்பேறுனவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது; தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றூர். —எபிரெயர் 1:6

............மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்.
—நீதிமொழிகள் 8:31 B

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். —ரோமர் 12:4,5

*அவருடைய சிங்காசனத்தில் மணவாட்டிக்கு பங்கு.*

**நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.**

—வெளிப்படுத்தின விசேஷம் *3:21*

*ராஜாவின் பட்டணமும் மணவாட்டியும்:*

அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன்..............
..............**ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.**

எபிரெயர் *11:16*

அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மை யாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? —லூக்கா *16:11*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை யை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவரா யிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவ ரியவான்களாகும் படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திர ரானாரே. —II கொரிந்தியர் *8:9*

என் பிரியமான...........தெரிந்து கொள்ளவில்லையா? — யாக்கோபு *2:5*

34 உண்மை ஐசுவரியம் என்றால் அதன் பொருள் என்ன? எனக்கு.

பிலிப்பியர் *3:21*

அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

கொலோசெயர் *1:12,13*

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மைவிடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

தேவனே! நான் உம்முடையவன் ஆனபடியால் நான் சந்தோஷப்படுகிறேன். 35

சங்கீதம் *40:16*

உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

II கொரிந்தியர் *4:17*

மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை; நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

36 எப்போதும் நீ அவருடைய இரக்கத்தை வெறுக்கிறுயா?

எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனே, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிருன்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது. —நீதிமொழிகள் *8:36*

பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினுல் எப்படித் தப்பிப்போவோம்? —எபிரெயர் *12:25*

பாவம் நிறைந்த ஆக்கினைக்குட்பட்ட.

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேருன குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனு யிராதபடியினுல், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட் பட்டாயிற்று.

—யோவான் *3:18*

## வசனத்தினுல் நியாயத்தீர்ப்பு

என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக்கடைசிநாளில் நியாயந் தீர்க்கும்.

—யோவான் *12:48*

முட்டாள் நித்திய காலமாக வேதனையில் சாத்தானோடு நகரத்தில் செலவழிப்பான், ஆனால் நீ சந்தோஷத்தோடு மோட்சத்தில் கிறிஸ்துவுடன் நித்திய காலமாக ஜீவிக்கலாம்.

சங்கீதம் *53:1*A

தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்.

லூக்கா *11:39,40*

கர்த்தர் அவனை நோக்கி: பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ................. .............உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ?

மகிமையின் ராஜாவை வெறுக்கிறவர்கள் அங்கே செல்வார்கள்.

எபிரெயர் 6:8

முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ, தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.

மத்தேயு *13:41,42*

மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து; அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

## ராஜாதி ராஜா அவரது சித்தபடி சாத்தானை சிறை அடைப்பார்.

வெளிப்படுத்தின விசேஷம் *20:1-3*

ஒருதூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்.

உன் வாழ்நாளை முழுவதும் யாருக்கு, நீ தொண்டு செய்வாய் என்று தீர்மானம் செய். 

மத்தேயு 6:24

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனுலும் கூடாது: ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப்பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

நீ சாத்தானை பின்பற்றி சிறைக்கு செல்கிருயா? அல்லது ராஜாதி ராஜாவை பின்பற்றி சிங்காசனத்திற்கு செல்கிருயா?

அப்போஸ்தலர் 26:18

அவர்கள் என்னைப்...........அனுப்புகிறேன் என்ருர்.

யோவான் *4:10*

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும். தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

யோவான் *7:37*

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.

வெளிப்படுத்தின விசேஷம் *7:17*

சிங்காசனத்தின்.................துடைப்பார் என்றான்.

# நீ அதை இழந்து போனாய்! உன் முழு இருதயத்தோடும் அவரை தேடு.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத்தேயு *6:33*

அப்பொழுது அங்கேயிருந்து உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய். உபாகமம் *4:29*

**என்னைச்.................என்னைக் கண்டடைவார்கள்.**
நீதி மொழிகள் *8:17*

## 44 தேவன் மணவாட்டியை அடையும் போது-கல்யாண விருந்து.

.........வெளிப்படுத்தின விசேஷம் *21:9*B -*11*A , *22-24* A

நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக்காண்பித்தான். அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும்.............அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்.

தேவனுக்கு எவ்விதமான மணவாட்டி 
அவருக்கு கீழ்ப்படியும்.

ரோமர் *6:13*b

உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

*மணவாளனை நேசிக்கும்*

எபேசியர் *6:24*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

46 *அக்கிரமம் அதிகமானபடியால்-ராஜா உலகத்தை நிர்மூலமாக்குவார்.*

வெளிப்படுத்தின விசேஷம் *17:14*

**இவர்கள் ஆட்டுக்குட்டியான வருடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்.**

வெளிப்படுத்தின விசேஷம் *18:21*

**அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச்..............**
**...........ஒரு போதும் காணப்படாமற்போகும்.**

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலே யும் செய்யப்படுவதாக. —மத்தேயு *6:10*

இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர் களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியி லும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத்தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். —வெளிப்படுத்தின விசேஷம் *20:4b*

ஜீவ காலம் முழுவதும் மணவாளனோடு தேவனும் நானும் முடிவில்லா நாட்கள் செல்வோம், என சந்தோஷம்.

சங்கீதம் *145:1*

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.

யோவான் *17:24*A

பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக.

## கிறிஸ்து உரைக்கிருர்

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலேஅவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனே அவனும் என்னுடைய சிங்காசனத்தில்என்னேடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

வெளிப்படுத்துதல் *3:21.*

ஒ, அருமைரட்சகர் காட்டின அன்பு பெரியது பாரமான சிலுவையில் மரித்தார் அழகான சிங்காசனத்தையும் மேன்மையையும் வெறுத்தார் என்னை போன்ற நீச பாவியை மீட்க — I. N. MCHOSE

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் பரிசுத்தர் நீதிபரர்
கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நான்தூசிஎன்னை நேசிக்கிருர்
கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவருக்கு நான்தொண்டு செய்வேன்
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ...*(3)* —வாட்சன் குட்மேன்.

Published in numerous languages by World Missionary Press, Inc. as God supplies funds in answer to prayer. If you would like more copies for prayerful distribution, specify which language(s) you need and how many booklets.

For more information or to request a free Bible study, please write to:

**WMP**
**India Bible Literature**
**67 Beracah Road**
**Kilpauk, Chennai 600 010**

Read booklets online or by App
www.wmp-readonline.org

www.wmpress.org 8-17 527 Tamil WAI